கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: டாக்டர் மோ.ஷர்மிளா, பி.டி.எஸ்.,

அ4/11498/2015 நாள்:15.07.2016

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - கடலூர் மாவட்ட வருவாய் அலகு - திருமதி.மு.ருக்குமணி க/பெ. திரு.ப்பி.முனிவேல் - கருணை அடிப்படையில் தடட்ச்சராக பணி நியமனம் செய்யப்பட்டது - தட்டச்சர் நிலையில் பணியை வரன்முறை செய்தும், தகுதிகான் பருவம் தொடங்கியும் ஆணையிடுதல் - தொடர்பாக.

படிக்கப்பட்டவை:
1. இவ்லுவலக கடித எண் அ4/11498/2015 நாள்: 24.07.2015
2. அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள்: 02.03.2016.
3. சென்னை இணை ஆணையர் (வ.நி) அவர்களின் கடித எண். ஆ.கு.3/ 31504/2015 நாள்: 20.05.2016

------------

ஆணை:-

கடலூர் மாவட்ட வருவாய் அலகில், கடலூர் மாவட்ட ஆய்வு சேர்ம அலுவலகத்தில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.ப்பி.முனிவேல் என்பவர் பணியிலிருக்கும்போது கடந்த 25.07.2014 அன்று இறந்துவிட்டதால், அவரது மனைவி திருமதி.மு.ருக்குமணி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் கடலூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 29.05.2015 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார். திருமதி.மு.ருக்குமணி என்பவரை தமிழ்நாடு அமைச்சுப்பணியில், கடலூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் 29.05.2015 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் முறையாக வரன்முறை செய்ய ஆணை வேண்டி வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு மேலே பார்வை-1ல் படிக்கப்பட்ட கடிதத்தில் முன்மொழிவு அனுப்பிவைக்கப்பட்டது.

2. பார்வை -3ல் படிக்கப்பட்ட கடிதத்தில் பார்வை-2ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படை பணி நியமனத்தை வரன்முறை செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளதை செயல்படுத்த முன்மொழிவில் அனுப்பப்பட்ட அசல் சான்றிதழ்களை திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

3. பார்வை-2ல் காணும் அரசாணையின் பத்தி 6.1-ன்படி 01.02.2016 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதிதளர்வு, மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு, தேவைப்படாத அனைத்து அலுவலர்களின் பணி நியமனமும் இதன் மூலம் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது

4. பார்வை-2ல் காணும் அரசாணையின் பத்தி 6.2-ன்படி அரசாணையின் பத்தி 6.1-ல் உள்ள ஆணையினை செயல்படுத்த சம்பந்தப்படட நியமன அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceeding) வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது

5. தனியரது தட்டச்சர் பணி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வருவதால் பணியமர்த்தப்பட்ட அரசு அலுவலர்களின் பணியினை வரன்முறைப்படுத்திய பின் 1954-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16 (b)-ன் கீழ் தேர்வாணையத்தின் இசைவினை பெறும் பொருட்டு உரிய முன்மொழிவுகள் நடைமுறையில் உள்ள வழிமுறைகளின் படி அரசுக்கு அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.

6. அரசாணை (நிலை) எண். 80-யின் படி தனியர் 01.02.2016 வரையான காலத்திற்குள் கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளார். கருணை அடிப்படையிலான தனியரது பணி நியமனம் எந்தவித விதித்தளர்வும் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கும் தேவைப்படாத நிலையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

7. கடலூர் மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.மு.ருக்குமணி என்பவரை தட்டச்சர் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு தட்டச்சர் நிலையில் கீழ் கண்டவாறு **பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் தொடங்கியும் ஆணையிடப்படுகிறது.**

| வ. எண். | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்) | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.மு.ருக்குமணி<br>தட்டச்சர்,<br>வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்,<br>கடலூர் | 29.05.2015 மு.ப. | 29.05.2015 மு.ப. |

மேற்காணும் விவரத்தினை சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளும்மாறு உரிய அலுவலரை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஒம்) மோ. ஷர்மிளா
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
கடலூர்.

-உ.ந.உ.ப.-
அலுவலக மேலாளர் (பொது) 2016

15.7.16

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர்கள் - உரிய அலுவலர்கள் மூலமாக
நகல்: இணை ஆணையர் வருவாய் நிருவாகம் சேப்பாக்கம், சென்னை-5
நகல்: வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், கடலூர் ,

கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.ஜெ.சண்முகம், பி.ஏ.,

அ4/-11498-/2015 நாள்: 06.02.2018

பொருள்: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தட்டச்சர் இனம்- திருமதி.மு.ருக்குமணி என்பவருக்கு தட்டச்சர் நிலையில் தகுதிகாண் பருவம் நிறைவு- ஆணையிடல்

பார்வை :1) சென்னை, இணை ஆணையர்(வ.நி) அவர்களின் கடிதம் ஆ.கு.3/31504/2015, நாள்: 20.05.2016.
2) சென்னை, கூடுதல் முதன்மைச் செயலர் (வருவாய் நிர்வாகம்) அவர்களின் கடித எண். ந.க.பணி 4(1)/7705/2012, நாள்: 18.04.2012
3) கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் நடவடிக்கைகள் எண். ந.க.அ4/37474/2011, நாள்: 29.05.2015.
4) அரசாணை (நிலை)எண் 80தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 02.03.2016
5) கடலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் நடவடிக்கைகள் எண். ந.க.அ4 /11498/2015 நாள்:15.07.2016
6)அரசு கடித (3டி)எண் 162 வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 20.12.2017
7)சென்னை முதன்மைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண்ஆ.கு3/31504/2015 நாள் 06.01.2018
8) தனியரின் பணிப்பதிவேடு

---------

ஆணை

கடலூர் மாவட்ட வருவாய் அலகில், கடலூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரியும் திரு.மு.ருக்குமணி என்பவர் தட்டச்சர் நிலையில் தகுதிகாண் பருவத்தினை கீழ்குறிப்பிட்டவாறு திருப்திகரமாக நிறைவு செய்ததாக விளம்பி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்) | தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள் | தகுதிகாண் பருவம் நிறைவு செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி.மு.ருக்குமணி<br>தட்டச்சர்,<br>வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்,<br>கடலூர் | 29.05.2015. முற்பகல். | 28.05.2017.பிற்பகல் |

2) தகுதிகாண்பருவம் நிறைவு செய்த விபரங்கள் குறித்து தனியரது பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறு, கடலூர் வருவாய் வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்,

(ஒம்) ஜெ.சண்முகம்
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
கடலூர்

/உ.ந.உ.ப./

அலுவலக மேலாளர் (பொது)
06.2.18

6.2.18

பெறுநர்

சம்மந்தப்பட்ட நபர் - உரிய அலுவலர் மூலமாக
நகல் : வருவாய் வட்டாட்சியர், கடலூர்.